# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2016 - 2017 අප්‍රේල් මස 21 වැනි සිකුරාදා - 2017.04.21

*2016 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 756 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 768 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** (i) குற்றச் செயல்களைத் தடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## கொபெய்கனே பிரதேச சபை

வடமேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

வடமேல் மாகாணம், கொபெய்கனே பிரதேச சபையில் கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமைகளைக் கொண்டுள்ள, வெற்றிடமாகவுள்ள பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தை தயாரித்து 2017.05.12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், கொபெய்கனே பிரதேச சபை, கொபெய்கனே" எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். பிரதேச சபை அதிகார சபைக்குள் வசிப்பவர்கள் மற்றும் அப்பிரதேச சபையில் தற்போது அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| பதவிப் பெயர் | சம்பளஅளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| அலுவலக அலுவல் உதவியாளர் | ரூபா 24,250-10X250-10X270-10X300-12X330 ரூபா 36,410 | 01 | க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

மேலே தரப்பட்ட பதவிகளுக்குரிய தகைமைகளுக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

1. **பொதுத் தகைமைகள்**:

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த 3 வருட காலப்பகுதியில் வடமேல் மாகாண நிரந்தர வதிவாளர் என நிரூபித்தல் வேண்டும். பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.) வாக்குரிமை பதிவேட்டின்மூலம் அல்லது பிரதேச செயலாளர் சான்றுபடுத்துகின்ற கிராம அலுவலரின் சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியான 2017.05.12 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோருக்கு மேற்குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) குற்றச் சட்ட கோவையின் கீழ் நீதிமன்றில் தண்டிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது.

(v) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ பதிவின்மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் 05 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனை பெறாதவராகவும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(vii) அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் விண்ணப்பிக்கும்போது, அரச சேவையிலிருந்து அல்லது மாகாண அரச சேவையிலிருந்து அல்லது அரச சட்டத்தின்கீழான சபைகள்/கூட்டுத்தாபனங்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

2. **சேவை நியதிகள்**:

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்;

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் மூன்று வருட தகுதிகாண் நிலைக்கு ஆட்படுவர்/தரமுயர்த்தப்படுமாயின் ஒரு வருட பதிற் கடமையாற்றும் காலவெல்லைக்கு ஆட்படுவர்;

(iii) மேற்கூறப்பட்ட பதவிகளின்கீழ் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவோர் விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(iv) இவ்வூழியர்கள் இடமாற்றத்திற்கு ஆட்படுவர். உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் இடமாற்றும் தத்துவம் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவருக்கே உரியதாகும். மேலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் இடமாற்றம் செய்தல் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களின் சம்மதத்தின்மீது உள்ளூராட்சி ஆணையாளரினால் நடைபெறும் கடமை நேரங்கள் மற்றும் கடமையில் ஈடுபடுதல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனத் தலைவருக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்கமைய தீர்மானம் எடுக்க முடியும்.

(v) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாய சோசலிசக் குடியசின் அரசியலமைப்பிற்கும் தாபன விதி கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரச அல்லது மாகாண சபை அல்லது திணைக்கள கட்டளைகளுக்கும் காலத்திற்குக்காலம் விடுக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அனுகூலமாகும். இதற்கமைய செயற்படுவதற்கும் நியமனம் பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.

3. **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதம்:**

(i) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/ கட்டமைக்கப்பட்ட பரீட்சை பெபேறுகளின் மீது அல்லது செயன்முறை பரீட்சையின் திறமைகள் மீது தமைமைகள் பெறுவோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/ கட்டமைக்கப்பட்ட பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை அல்லாத பதவிகளுக்காக நேர்முகப் பரீட்சையின் மூலம் பெறப்படும் புள்ளிகள் மற்றும் தகைமைகள்மீது தகைமையுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

4. **விண்ணப்பிக்கும் விதம்:**

(i) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ்;
(2) தேசிய அடையாள அட்டை;
(3) ஆரம்ப கல்வித் தகைமைகள் நிரூபிக்கும் ஆவணங்கள்;
(4) தொழில்சார் அல்லது அனுபவங்களை நிரூபிக்கும் ஆவணங்கள்;
(5) தங்கள் வதிவை நிரூபிக்கும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.

(ii) ஆரம்ப தமைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்;

(iii) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/ தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் கொபெய்கனே பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்;

(iv) விண்ணப்பப்படிவம் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை வர்த்தமானி அறிவித்தலில் குறித்துள்ளதன் பிரகாரம் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் 04 ஆம் பந்தியின் I இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். நியமித்த திகதியான 2017.05.12 இற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பிரதேச சபை அலுவலகம்,
கொபெய்கனே,
2017, ஏப்பிறல் 05.

ஆர். பி. என் ஜயகொடி,
செயலாளர்,
கொபெய்கனே பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கொபெய்கனே பிரதேச சபை அலுவலக அலுவல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் ..........................................................
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்: ..........................................................
03. நிரந்தர விலாசம் : ..........................................................
04. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................................
05. பிறந்த திகதி : ஆண்டு : ...................... மாதம் : ................................... திகதி : .................................
06. விண்ணப்ப முடிவுத் திகதியான 2017.05.12 ஆந் திகதியன்று வயது : ..............................................
வருடங்கள்: ..........................................மாதங்கள்: .................................. நாட்கள் : .........................................
07. பால் (ஆண் /பெண் ) : ..........................................................
08. விவாகமானவரா? விவாகமாகாதவரா ? ..........................................................
09. தேசிய இனம் : ..........................................................
10. கொபெய்கனே பிரதேச சபையில் தற்போது சேவையாற்றுகின்றீராயின்,
வகிக்கும் பதவி : ....................................... சேவைக் காலம் : ............................................. அப்பதவி நிரந்தர/தற்காலிக/ அமைய/ஒப்பந்தம் ஆகியன

11. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரை மூலமாகவா? பதிவின் மூலமாகவா ? ..............................................
12. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) : .....................................................................
13. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் : ...................................................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தமைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : .........................................

.................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவராயின்
திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................................................. தற்போது இத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் (நிரந்தர/அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் ................................................................. ஆக சேவையாற்றுகிறார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

...............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : ..............................................................................
பதவி : ................................................................................
திணைக்களம்/ நிறுவனம் : .....................................................
(பதவி முத்திரை இடவும்)
திகதி : ................................................................................

4-537

---

**ஜா- எல பிரதேச சபை - கந்தானை**

மேல் மாகாண அரச சேவையில் ஜா-எல பிரதேச சபையில் வெற்றிடங்களாயுள்ள கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட் டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு ஆகக்குறைந்த தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | வேலை நிர்வாகத்தர் தரம் III | 01 | எம்என் 1 - 2016 ரூபா 27,140-10x300-11x350-10x 495-10x660-ரூபா 45,540 | மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்காக:<br>**கல்வித் தகைமைகள்:**<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் மொழி, கணிதம், ஆகிய பாடங்களில் இரண்டு திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; (இவற்றில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br>**அனுபவம்:**<br>உள்ளூராட்சி நிறுவனத்தில் PL -1, PL-2 குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெற்று நிரந்தரமாக்கப்பட்டு 05 வருட நிரந்தர சேவைக் காலத்தை பூர்த்தி செய்தவராக |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|

இருத்தல் வேண்டும். என்பதுடன் சேவைக்காலம் நிறுவன தலைவரினால் உறுதிபடுத்தப்படுதல் வேண்டும்.

**சரீர தகைமைகள்:**

பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரிய போது மானளவு சரீர மற்றும் மானசீக தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்:**

கீழே குறிப்பிடப்பட்டவாறு நடாத்தப் பெறும் எழுத்துமூலப் பரீட்சையில் புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரி களிடமிருந்து வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரண்டு மடங்கு அளவினர் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவதுடன் இவ் இரு பரீட்சைகளிலும் கூடிய புள்ளிகளை பெறுவோர் இவ் வெற்றிடங்களுக்கு ஆட் சேர்த்துக் கொள்ளப்படுவர்:-

| பாடம் | புள்ளி | சித்தி |
|---|---|---|
| பொது அறிவு மற்றும் புலமைப் பரீட்சை (1மணித் தியாலம் | 100 | 40% |
| துறைக்குரிய அறிவை பரீட் சித்தல் (1மணித் தியாலம்) | 100 | 40% |

**பாடத்திட்டம்**

*பொது அறிவு மற்றும் புலமைப் பரீட்சை:*

பொருளாதார, சமூக, கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், அரசியல் போன்றே விளையாட்டுத்துறைக்கு உரிய உள்நாட்டு மற்றும் வெளி நாட்டில் முக்கியத்துவம் பெற்ற தற்போதைய நிகழ்வுகள் பற்றிய அறிவு மற்றும் விண்ணப்பதாரியின் மொழித்திறன், இயங்கும் சக்தி மற்றும் கணிப்பிடும் இயலுமை பரீட்சித்தல் எதிர்பார்க்கப்படும்.

*துறைக்கு உரிய அறிவை பரீட்சித்தல் :*

உள்ளூராட்சி கட்டளைச்சட்டம் மூலம் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரயோகிக்கும்போது, கைத்தொழில் பிரிவினால் நடத்தப்படும் செயற்பாடுகளின் போது, வழிகளை ஒழுங்குசெய்தல், வடிகாண் முறைமையை தயாரித்தல், முன்கலவையை கொட்டுதல், பாதைகள் பராமரிப்பு அலுவல்களில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் கடமைகளை மேற்பார்வை செய்தலும் நிர்வகித்தலும், வரவும் லீவு பெறும் விடயத்தில் நடவடிக்கை எடுக்கும் விதமும் போன்றவை பற்றிய ஆரம்ப அறிவை பரீட்சித்தல் எதிர்பார்க்கப்படும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|

| பாடம் | ஆகக்கூடிய புள்ளிகள் | கருத்திற் கொள்ளும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| பூர்த்தி செய்துள்ள நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக் காலம் (மேலதிக சேவைக் காலத்திற்கான ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் விதம்) | 15 | 50% |
| பதிற் கடமையாற்றல் அல்லது கடமையை நிறைவேற்றல் (நிர்வாக பதவிக்கு சட்டப்படியான கடிதத்திற்கு பதிற் கடமையாற்றும் கடமையை நிறைவேற்று கால எல்லைக்கு ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்) | 10 | |
| துறைக்கு உரிய அறிவை பரீட்சித்தல் (துறைக்குரித்தான நேரடி பிரச்சினையை கட்டாய பிரச்சினையாக முன் வைக்கப்படும்) | 20 | |
| தோற்றப்பொழிவு அலுவலர் நேர்முக பரீட்சைக்குத் தோற்றும் விதம் மற்றும் ஏனைய காரணிகள் கருத்திற் கொள்ளப்படும் | 05 | |

* மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து வெற்றிடங்கள் நிரப்ப முடியாதவிடத்து திறந்த விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

*திறந்த விண்ணப்பதாரிகளுக்காக:*

**கல்வித் தகைமைகள்:**

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் இரண்டு திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங் களில் சித்தி பெற்றிருத்தல்;

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்.

**உடற் தகைமைகள்:**

பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரிய போதுமானளவு சரீர மற்றும் மானசீக தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | **ஏனைய தகைமைகள்:**<br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.<br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்:**<br>கீழே குறிப்பிடப்பட்டவாறு நடாத்தப் பெறும் எழுத்துமூலப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளிற்கு அமைய அதிகூடிய புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்:-<br>பாடம் — புள்ளிகள் — சித்தி பெறும் புள்ளிகள்<br>விவேக மற்றும் புலமை பரீட்சை (1மணித்தியாலம்) — 100 — 40%<br>50%<br>தற்கால நிகழ்வுகள் பற்றியஅறிவு (1மணித்தியாலம்) — 100 — 40%<br>**பாடத்திட்டம்**<br>***விவேகம் மற்றும் புலமைப் பரீட்சை:***<br>தர்க்கிக்கும் வலு, கணிப்பிடும் இயலுமை மற்றும் மொழி இயலுமை ஆகியவற்றை அளவிடல்.<br>***தற்கால நிகழ்வுகள் பற்றிய பொது அறிவுப் பரீட்சை :***<br>பொருளாதார, சமூக, கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், அரசியல் போன்றே விளையாட்டுத்துறைக்கு உரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் முக்கியத்துவம்பெற்ற தற்போதைய நிகழ்வுகள் பற்றிய அறிவு அளவிடுதல் எதிர்பார்க்கப்படும். |
| 02 | மின்சார தொழில்நுட்ப வலர் (முதன்மை அரை தொழில்நுட்ப வலர் தரம் III) | 01 | பீஎல் 2 - 2016<br>ரூபா 25,250-10x270-10x300 10x330-12x 350-ரூபா 38,450 | **துறைக்குரிய கடமை**- சகல விதமான மின்சாரம் நிறுவும் அலுவல்கள், மின்சாரம் விநியோகித்தல், மின்சார சேவையை பராமரித்தல், மின் உபகரணங்கள் மற்றும் பொறித் தொகுதிகளை பராமரித்தல்.<br>***மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்த்துக்கொள்ளல் :***<br>கல்வித் தகைமைகள் க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் ; (இவற்றில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br>***தொழில்சார் தகைமைகள் :***<br>உரிய பதவிக்கான குறிப்பின் பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழி கல்வி ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய வாழ்க்கைத் தொழில் (NVQ), இல் ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தல் அல்லது உரிய துறையில் 06 மாதத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்மூலம் நிரூபித்தல் வேண்டும்.)<br>***ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம் :***<br>ஆரம்பக் கல்வி தகைமைகளை பரீட்சித்தல், சரீர தகைமைகள் பரீட்சித்தல் ஆகியன கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் நடாத்தப்படுவதுடன் அங்கு பெறப்பட்ட புள்ளிகள் ஒழுங்கின்படி ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்; |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்ப கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக பெறப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் பதவிக்கு உரிய செயன்முறை அறிவு, தோற்றப்பொழிவு ஆகிய பிரதான தலைப்பின்கீழ் புள்ளிகள் வழங்கப்படும்)<br><br>(**கவனிக்க** - மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரி களிடமிருந்து வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாதவிடத்து திறந்த விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.)<br><br>***திறந்த ஆட்சேர்த்துக்கொள்வதற்காக:***<br><br>**கல்வித் தகைமைகள்** .- க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் இரண்டு திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் ; (இவற்றில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>***தொழில்சார் தகைமைகள்:***<br>உரிய பதவிக்கான குறிப்பின் பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய வாழ்க்கைத்தொழில் (NVQ) இல் ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தல் மற்றும் உரிய துறையில் 06 மாதத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல். (சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்.)<br><br>***ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்*** :<br>ஆரம்பக் கல்வித் தகைமைகள் பரீட்சித்தல், சரீர தகைமைகள் பரீட்சித்தல் ஆகியன கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் நடாத்தப்படுவதுடன் அங்கு பெறப்பட்ட புள்ளிகள் ஒழுங்கின்படி ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர் ;<br><br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக பெறப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் பதவிக்கு உரிய செயன்முறை அறிவு, தோற்றப்பொழிவு ஆகிய பிரதான தலைப்பின்கீழ் புள்ளிகள் வழங்கப்படும்) |
| 03 | மோட்டார் தொழில் நுட்பவலர் (முதன்மை அரை தொழில்நுட்ப வலர் தரம் III) | 01 | பீஎல் 2 - 2016<br>ரூபா 25,250-10x270-10x300-10x330-12x 350-ரூபா 38,450 | **துறைக்குரிய கடமை** - பெற்றோல் டீசல் வாகனங்கள் மற்றும் பொறித் தொகுதிகளின் குறைபாடுகளை கண்ட றிதல் பொறித்தொகுதி மற்றும் வாகனங்களை திருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br><br>***மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்த்துக்கொள்ளல்***<br><br>**கல்வித் தகைமைகள் -**<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், (இவற்றில் ஐந்து (05) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br><br>**தொழில்சார் தகைமைகள்**<br>உரிய பதவிக்காக முடிவின் பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய வாழ்க்கைத் தொழில் பயிற்சியில் ஆகக் குறைந்தது NVQ இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தல் அல்லது உரிய |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | துறையில் 06 மாதத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்.)<br><br>**அனுபவம் :**<br>உள்ளூராட்சி நிறுவனமொன்றில் முதல் தர சேவையில் நிரத்தரமாக்கப்பட்டு திருப்தியான 05 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளவராக இருத்தல் வேண்டும்.<br><br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம் :**<br>கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பத் தகைமைகள் பரீட்சித்தல், சரிரத் தகுதியை பரீட்சித்தல் நடைபெறுவதுடன் அதில் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைய ஆட்சேர்த்துக் கொள்ளல் நடை பெறும்.<br><br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்துக் கொள்ளும் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள், துறைக்குரிய செயன்முறை அறிவு, தோற்றப்பொழிவு முதலிய பிரதான தலைப்புக்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.)<br><br>(**கவனிக்க**:- மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரி களிடமிருந்து வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாதவிடத்து திறந்த விண்ணப்பதாரிகளை அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.)<br><br>*திறந்த விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்துக்கொள்ளல்*<br><br>**கல்வித் தகைமைகள்:**<br>க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்;<br><br>(இவற்றில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br><br>**தொழில்சார் தகைமைகள்:**<br>உரிய பதவிக்கு உரியவாறு மூன்றாம் நிலை, வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு உள்ளவாறு தேசிய தொழில்சார் தகைமையில் (NVQ) ஆகக்குறைந்தது இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தல் மற்றும் ஆகக்குறைந்தது உரிய துறையில் 06 மாதத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்மூலம் நிரூபித்தல் வேண்டும்).<br><br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்:**<br>கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பத் தகைமைகள் பரீட்சித்தல், சரீரத்தகுதி பரீட்சித்தல் நடைபெறுவதுடன் அதில் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைய ஆட்சேர்த்துக் கொள்ளல் நடை பெறும்.<br><br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்துக் கொள்ளும்தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித்தகைமைகள், துறைக்குரிய செயன்முறை அறிவு, தோற்றப்பொழிவு முதலிய பிரதான தலைப்புக்களின்கீழ் புள்ளிகள் வழங்கப்படும்). |
| 04 | சாரதிகள் III | 03 | பீஎல் 1- 2016<br>ரூபா 25,790- 10X270 - 10X300-10X330-12X350 - ரூபா 38,990 | **கல்வித் தகைமைகள் :**<br>க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; (இவற்றில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்). |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | **தொழில்சார் தகைமைகள்:**<br>1. பார வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (நிகர நிறை 34 அந்தர் வரையான பாரமற்ற லொறிகள் மற்றும் 32 பிரயாணிகளுக்குக் குறைந்த எண்ணிக்கையினோர் செல்லக்கூடிய பஸ்வண்டியிற்கான அனுமதிப்பத்திரம் அதாவது 'ஏ1' மற்றும் 'சீ1' வகுப்பைச் சேர்ந்த அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப் பத்திரத்திற்கமைய 'பி' மற்றும் 'டி1' வகுப்பு அனுமதிப் பத்திரம் இல்லாவிட்டால் நிகர நிறை 34 அந்தரிற்கு கூடுதலான மோட்டார் வாகனங்கள் மற்றும் பார ரிரேலர்கள் மற்றும் 32 பயணிகளுக்குமேல் பயணம் செய்யக் கூடிய பஸ்வண்டிக்கான அனுமதிப்பத்திரம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது 'ஏ' வகுப்பு அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு அமைய 'டி' வகுப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.<br>2. பெருவீதிகள் சட்டக்கோவைப் பற்றிய போதிய அறிவு இருத்தல் வேண்டும்.<br>**அனுபவம்:**<br>சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட பின்னர் சாரதியாக ஆகக்குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (அனுபவச் சான்றிதழ் சட்டமுறையானதாக இருத்தல் வேண்டும்)<br>**ஏனைய தகைமைகள்:**<br>குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும்.<br>இரவு மற்றும் பகல் காலங்களில் சேவையாற்றக்கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும்.<br>**தொழில்சார் பரீட்சித்தல்:**<br>திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார்வண்டி பரீட்சிப்பவர், பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அலுவலரொருவர் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் சாரதிப்பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். |
| 05 | காவலாளி (முதன்மை தொழில்நுட்ப வரல்லாத தரம் III ) | 01 | பீஎல் 1- 2016<br>ரூபா 24,250- 10X250 - 10X270 - 10X300 - 12X330 - ரூபா 36,410 | **கல்வித் தகைமைகள்:**<br>க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்றாமல் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; (இவற்றில் ஐந்து (05) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்:**<br>கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பத் தகைமைகள் பரீட்சித்தல், நடைபெறுவதுடன் அதில் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைய பொது நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளல் நடைபெறும்.<br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்துக் கொள்ளும் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித்தகைமைகள், சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் தற்போதைய நிகழ்வுகள் பற்றிய அறிவு, தோற்றப் பொழிவு முதலிய பிரதான தலைப்புக்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்). |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 06 | தகன நிலைய பொறுப்பாளர் (முதன்மை தொழில்நுட்ப வரல்லாத தரம் III) | 01 | பீஎல் 1- 2016 ரூபா 24,250-10X250 - 10X270-10X300-12X330 - ரூபா 36,410 | **கல்வித் தகைமைகள்:** க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; (இவற்றில் ஐந்து (5) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br><br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்:** கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பத் தகைமைகள் பரீட்சித்தல், நடைபெறுவதுடன் அதில் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைய மற்றும் பொது நேர்முகப் பரீட்சையில் கருத்திற் கொள்ளப்படும் தேவைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் நடைபெறும்.<br><br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்துக் கொள்ளும் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள், தற்போதைய நிகழ்வுகள் பற்றிய அறிவு, தோற்றப்பொழிவு முதலிய பிரதான தலைப்புக் களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| 07 | நூல்நிலைய உதவியாளர் (முதன்மை தொழில்நுட்ப வரல்லாத தரம் III) | 01 | பீஎல் 1 - 2016 ரூபா 24,250 -10x250- 10x270-10x 300-12x330- ரூபா 36,410 | **கல்வித் தகைமைகள் :** க. பொத. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; (இவற்றில் ஐந்து (5) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).<br><br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்:** கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பத் தகைமைகள் பரீட்சித்தல், நடைபெறுவதுடன் அதில் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைய மற்றும் பொது நேர்முகப் பரீட்சையில் கருத்திற்கொள்ளப்படும் தேவைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் நடைபெறும்.<br><br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்த்துக் கொள்ளும் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள், தற்போதைய நிகழ்வுகள் பற்றிய அறிவு, தோற்றப்பொழிவு முதலிய பிரதான தலைப்புக் களின்கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| 08 | சுகாதார ஊழியர் (முதன்மை தொழில்நுட்ப வரல்லாத தரம் III) | 02 | பீஎல் 1 - 2016 ரூபா 24,250 -10x250- 10x270-10x 300-12x330- ரூபா 36,410 | **சுல்வித் தகைமைகள்:** ஆகக்குறைந்தது 8 ஆந் தரம் /ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்** கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் ஆரம்பத் தகைமைகள் பரீட்சித்தல் நடைபெறுவதுடன் அதில் பெறப்படும் புள்ளிகளுக்கு அமைய மற்றும் பொது நேர்முகப் பரீட்சையில் கருத்திற்கொள்ளப்படும் தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் நடைபெறும்.<br><br>(கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் உள்ளூராட்சி நிறுவனத்தில் அமைய, பதிலீடு ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் சேவைக்காலம் (ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம்) பதவிக்கு உரித்தாக பெற்றுள்ள அனுபவம் பற்றிய ஏனைய சான்றிதழ், சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் தற்போதைய நிகழ்வுகள் பற்றிய அறிவு, தோற்றப்பொழிவு முதலிய பிரதான தலைப்புக்களின்கீழ் புள்ளிகள் வழங்கப்படும்). |

02. **குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஏனைய பொது நிபந்தனைகள்:**

(i) விண்ணப்பங்கள் கோரப்படும் வேளையில் விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது 03 வருட நிரந்தர பதிவாளராக இருத்தல் வேண்டும்.

(ii) வேலை துறை நிருவாகத்தர் தவிர்த்து ஏனைய பதவிகளுக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதொல்லை ஏற்புடைத்தாகாது.)

(iii) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(iv) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் மேல் மாகாணத்தின் எவ்விடத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியமும் உடையவராகவிருத்தல் வேண்டும்;

(v) தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது அல்லது அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;

03. **ஆட்சேர்ப்பு செய்யும் விதம் மற்றும் விண்ணப்பிக்கும் விதம்:**

(i) அவ்வவ் ஆட்சேர்த்துக்கொள்ளல் ஒழுங்குவிதிகள், சேவை ஏற்பாடுகளுக்கு அமைய பரீட்சை கட்டமைப்பு நேர்முகப்பரீட்சை, தொழில்சார் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சையின்முலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(ii) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 15.05.2017 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், ஜா-எல பிரதேச சபை, கந்தானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (ஏலவே அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்).

(iii) விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தை தாங்கியுள்ள கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) கல்விச் சான்றிதழ் (உரிய பிரகாரம்);
(இ) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

04. **சேவை நியதிகள்**:- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அரசினால் எடுக்கப்படும் கொள்கை தீர்மானத்திற்கு ஆட்பட்டதாகும்.

05. விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் ஜா-எல பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

06. ஆகக்குறைந்த தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தொழில்சார் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

(தமிழ், ஆங்கில மொழிப்பெயர்ப்புக்களில் ஏதேனும் பேதமிருப்பின் சிங்கள மொழி உரையே முக்கியத்துவமாகும் என்பதை கவனத்திற் கொள்க.)

எல். ஏ. மஞ்சுளா சமந்தி,
செயலாளர்,
ஜா-எல பிரதேச சபை.

ஜா-எல பிரதேச சபை அனுவலகம்,
கந்தானை,
2017, ஏப்பிறல் 06

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஜா-எல பிரதேச சபையில் ................................................................ பதவி**

01. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) ....................................................................................................
02. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள்: .........................................................................................................................
03. பால் (ஆண் /பெண் ) : ....................................................................................................................................
04. பிறந்த திகதி : ஆண்டு : ....................... மாதம் : .................................... திகதி : ..................................
05. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................................................................................................
06. தற்போது வகிக்கும் பதவி : ..............................................................................................
07. சேவையாற்றும் உப அலுவலகம் : ...............................................
08. ஆற்றும் கடமை (சுருக்கமாக) : ..................................................................................
09. தொலைபேசி இலக்கம் : ..........................................................................
10. கல்வித் தகைமைகள் : ..................................................................................................

(சான்றிதழ்களை இணைத்தல் வேண்டும்)

11. தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் : ...........................................................................................

(சான்றிதழ்களை இணைத்தல் வேண்டும்)

12. சேவை அனுபவம் : ...............................................
13. நீதிமன்றில் ஏதேனும் குற்றத்திற்காக எப்போதாவது தண்டிக்கப்பட்டுள்ளீராயின் தண்டனைப் பற்றிய விபரம் : .......................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : .........................................

.................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பிரிவுத் தலைவரின் சிபார்சு

................................................................................... ஆந் திகதியன்று என் முன்னால் கையொப்பமிட்ட திரு. /திருமதி/ செல்வி .................................................................. உப அலுவலகத்தில் / சேவையாற்றுவதுடன் பதவிக்கு தகுதியானவர் என சிபார்சு செய்கின்றேன்.

.............................................................
பிரிவுத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடவும்)

திகதி : ............................................................................

4-646

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம்

*இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களினால் அதில் காணப்படும் இடங்களில் 2017 ஆம் ஆண்டில் இறைச்சி விற்பனை செய்வதற்காக உரிமப் பத்திரம் கோரி விண்ணப்பப் படிவம் என்னிடத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவ் உரிமப் பத்திரத்தினை வழங்குவது பற்றி உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குடியிருப்பவர்கள் எவரேனும் எதிர்ப்பு தெரிவிப்பதாயின் அவர் எதிர்ப்பு தெரிவிப்பது எக் காரணத்திற்காக என்பது பற்றிய இரு பிரதிகளுடன் எழுத்து மூலம் இவ் அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV(ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களினுள் எனக்கு அனுப்ப வேண்டும். ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அதிகாரம்) இலக்கம் 7 (2) ஆம் பிரிவின் கீழ் இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

எஸ். ஜே. எஸ். வனசிங்ஹஆரச்சி,
செயலாளர்,
உடுபத்தாவ பிரதேச சபை.

*உடுபத்தாவ பிரதேச சபை அலுவலகம்,
2017 பெப்புருவரி 21.*

**அட்டவணை**

| கோரிக்கையாளரின் பெயர் | வியாபாரம் | மாட்டிறைச்சி விற்பனை நிலையம் |
|---|---|---|
| எம். எச். எம். ரியாஸ் எதுன்கஹகொடுவ எதுன்கஹகொடுவ | மாட்டிறைச்சி விற்பனை நிலையம் | எதுன்கஹகொடுவ எதுன்கஹகொடுவ, எச். எம். பாதிமா நசீஜா இற்கு உரிய காணி |
| எஸ். முஸ்தகீம் யகம்வெல, எதுன்கஹகொடுவ | மாட்டிறைச்சி விற்பனை நிலையம் | யகம்வெல, எதுன்கஹகொடுவ, திரு. அப்துல் சலாம் இற்கு உரிய காணி |
| ரசிக சுரங்க | பன்றி இறைச்சி விற்பனை நிலையம் | கட்டிமஹன, தும்மலசூரிய திரு. ஹத்வைஸ் இற்கு உரிய காணி |

4-565

---

**காலி மாநகர சபை**

அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் நேர் எதிர் விளைவு ஏற்பாடுகள் விதிகள், சட்டத்தின் 2 வது பிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற (261 வது அதிகாரமாகிய) 1952 ஆம் ஆண்டின் இலக்கம் 06 ஐக் கொண்ட உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள்) சட்டத்தின் 2வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அவரால் தயாரிக்கப்பட்ட மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1811 உம் 2013.05.17 ஆந் திகதி கொண்ட வர்த்தமானிப் பத்திரிகையில் IV(அ) பகுதியில் அறிவிக்கப்பட்டதுமான தென் மாகாணத்தில் மாகாண சபையின் மூலம் அனுதிக்கப்பட்டதுமான அது பற்றிய இலக்கம் 1872 மற்றும் 2014.07.18 ஆந் திகதிய வர்த்தமானியில் IV(அ) பகுதியில் அறிவிக்கப்பட்டதுமான தென் மாகாணத்தின் மாநகர சபை அதிகாரப் பிரிவிற்குள் பாதைகள் மாறுதல் இடங்கள் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள், வாகனங்களை நிறுத்தும் மற்றும் வாகனங்களை வழிநடாத்துதல் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளும் பாதைகளுக்கு நஷ்டங்கள் ஏற்படுத்தும் மற்றும் பாதைகளில் போக்குவரத்திற்கு இடைஞ்சல்களை தடுப்பது பற்றிய அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் மேலே குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள்) சட்டத்தின் 2 வது பிரிவின் (3) வது உப பிரிவின் ஏற்பாடுகளுக்குக் கீழ் ஏற்றுக் கொள்வதற்கும், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட*

*திகதி முதல் உரிய ஏற்பாடுகளை காலி மாநகர சபை அதிகாரப் பிரிவிற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் 2017.03.10 ஆந் திகதி தீர்வு இல. 1543 இன் கீழ் முடிவு செய்யப்பட்டது எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*ரணில் விக்கிரமசேக்கர,*
*மாநகர ஆணையாளர்,*
*காலி மாநகர சபை.*

*காலி மாநகர சபை அலுவலகம்,*
*2017, மார்ச் 15.*

*4-450*

---

**கல்முனை மாநகர சபை**

*ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் -272)*

*கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் விபரங்களின் படி அந்தந்த விலாசங்களில் 2017 ஆம் ஆண்டுக்கான இறைச்சிக்கடை நடாத்துவதற்கு இறைச்சிக்கடை அறுமதிப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு கல்முனை மாநகர சபை பிரதேசத்தில் வசிக்கும் எந்த நபரிடமிருந்தாவது எதிர்ப்பு ஆட்சேபனை தோன்றுமாயின் அவை எழுத்து மூலம் தயாரிக்கப்பட்டு இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் என்னை வந்து சேரும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும். ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம் ) 7 (2) ஆவது பிரிவின்படி இவ்வறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*ஜே. லியாகத் அலி,*
*மாநகர ஆணையாளர்,*
*கல்முனை மாநகரசபை.*

*மாநகரசபை அலுவலகம்,*
*கல்முனை,*
*2017, மாச்சு 16.*

**பிரத்தியேக இறைச்சிக்கடை**

**இறைச்சி பொதி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்**

| ***விண்ணப்பதாரியின் பெயர்*** | ***முகவரி*** |
|---|---|
| வெள்ளத்தம்பி முகம்மட் அறபாத் (ஹனாதி மார்க்கெட்டிங்) | இல. 168 சீ, பிரதான வீதி, கல்முனை |

**இறைச்சிக்கடை**

| ***விண்ணப்பதாரியின் பெயர்*** | ***முகவரி*** |
|---|---|
| இளையதம்பி இஸ்ஸதீன் முஹம்மது | அலியார் வீதி, கல்முனைக்குடி |

*4-451*

---

**அரநாயக்க பிரதேச சபை**

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 14 மற்றும் 24 (2) ஆம் உறுப்புரையின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24வது பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள் /வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள் /வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*தற்போது பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் /வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமை பாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) வது உறுப்புரையின் பிரகாரம் செயற்படுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள் / வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் /வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

டீ. எம். சந்ராவதி,
செயலாளர்,
அரநாயக்க பிரதேச சபை.

அரநாயக்க பிரதேச சபைக் காரியாலயம்,
2017, மாச்சு 28.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | வாகிரிகலை மொரகஹவெல கும்புர கொடலியத்த பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | வாகிரிகலை பாடசாலை பாதையில் ஆரம்பித்து கொடலியத்தையில் முடிவடையும் |
| கிராம அலுவலர் பிரவு | : | இல. 16 வாகிரிகலை |
| பாதையின் நீளம் | : | 119 மீற்றர் |
| பாதைகயின் அகலம் | : | 08 அடி |


பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப் பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. எச். ஏ. டிக்கிரிபண்டா | மொரகஹவெல காணி |
| 2. | திரு. ஷாந்த பிரேமகுமார திலகரத்ன | மொரகஹவெல கும்புர |

பாதையின் ஆரம்ப முதல் இறுதி வரை பாதையின் வலது பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. எச். ஏ. ரண்பண்டா | மொரகஹவெல காணி |
| 2. | திரு. எச். ஏ. பீ. ஹெட்டிஆரச்சி | ஹபுகஹமுலதெனிய காணி |
| 3. | திரு. பீ. ஏ. சந்திரதிலக பண்டார | ஹபுகஹமுலதெனிய காணி |
| 4. | திரு. பீ. ஏ. சந்திரதிலக பண்டார | ஹபுகஹமுலதெனிய காணி |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2014.12.03 ஆந் திகதியும் 343/2014 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.



# வரவு செலவுத் திரட்டுக்கள்

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் செயலாளர் எச். ஏ. ஜீ. நிஸ்ஸங்க ஆகிய நான் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2016.12.31 இவ் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு 2017.04.03 ஆந் திகதிய 2017/624 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் தீர்மானித்துள்ளேன் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

எச். ஏ. ஜீ. நிஸ்ஸங்க,
செயலாளர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

பண்டுவஸ்நுவர பிரதேச சபை அலுவலகம்,
2017, ஏப்பிறல் 03.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரமும் 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிகள் தொகுதியின் 216 ஆம் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் பின்வரும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வுக்கு அனுப்பப்பட்ட பண்டுகஸ்நுவர பிரதேச சபையின் 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான செலவினக் கணக்கு 2016.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்துடன் 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை பொதுமக்களின் தகவல் பொருட்டு பகிரங்கப்படுத்துவதற்கு 2017.04.03 ஆந் திகதிய 2017/624 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் நான் தீர்மானித்துள்ளேன்.*

**அட்டவணை 1**

2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

**2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு**

| **1. மீண்டுவரும் வருமானம்** | **2016** | **2015** |
|---|---|---|
| 10. வீதவரியும் வரியும் | 3,764,210.72 | 2,128,906.84 |
| 20. வாடகை | 29,312,919.42 | 23,608,044.23 |
| 30. உத்தரவுப்பத்திர கட்டணங்கள் | 1,195,658.91 | 2,230,718.78 |
| 40. சேவைகளுக்கான கட்டணங்கள் | 54,291,615.92 | 31,135,186.75 |
| 50. குற்றப்பணமும் பிடியாணை கட்டணமும் | 7,358,561.21 | 6,138,196.63 |
| 60. ஏனைய வருமானங்கள் | 5,376,432.52 | 10,022,368.99 |
| 70. வருமான நன்கொடை | 58,073,618.42 | 51,956,149.05 |
| **மொத்த மீண்டுவரும் வருமானம்** | **1,59,373,017.12** | **1,27,219,571.27** |
| **2. மீண்டுவரும் செலவினம்** | | |
| 01. சம்பளமும் படியும் | 56,325,634.75 | 56,397,592.11 |
| 02. பிரயாணச் செலவு | 379,466.20 | 315,567.26 |
| 03. வழங்கலும் உபகரணமும் | 7,192,868.27 | 7,673,606.73 |
| 04. மூலதன சொத்து திருத்தமும் பராமரிப்பும் | 24,805,116.84 | 20,321,522.54 |
| 05. போக்குவரத்து, இணைப்புச் சேவைகள் | 7,436,676.32 | 6,807,619.75 |
| 06. வட்டிசெலுத்துதலும் பங்கிலாபமும் | 1,547,164.57 | 1,702,177.07 |
| 07. நன்கொடை உதவுதொகை மானியம் | 4,848,121.70 | 4,080,495.35 |
| 08. ஓய்வூதியமும் ஓய்வூதியப் பணிக்கொடையும் | 234,112.03 | 107,158.68 |
| **மொத்த மீண்டுவரும் செலவினம்** | **102,769,160.68** | **97,405,739.49** |

| | | |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினத்தைவிட அதிகரித்த/ குறைந்த வருமானமும் செலவினமும்** | 56,603,856.44 | 29,813,831.78 |
| 3. மூலதன நன்கொடை | | |
| 80 மூலதன நன்கொடை | 66,459,574.39 | 30,559,786.17 |
| **மீண்டுவரும் செலவினத்தைவிட அதிகரித்த வருமானமும் மூலதன வருமானமும்** | **1,23,063,430.83** | **60,373,617.95** |
| 4. மூலதன செலவினம் | | |
| 90 மூலதன செலவினம் | 85,852,182.59 | 63,634,496.78 |
| **மிகை அல்லது குறைவு** | **37,211,248.24** | **(3,260,878.83)** |

**அட்டவணை II**

*2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு*

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

***2016.12.31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று***

| **சொத்துக்கள்** | குறிப்பு | **2016.12.31** | **2015.12.31** |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | - | | |
| ஆதனம், பொறித்தொகுதி உபகரணம் | 06 | 2,05,470,763.14 | 1,86,948,307.34 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | - | | |
| இருப்பு | 07 | 4,666,088.00 | 3,825,721.28 |
| வருமானகடன்பட்டோர் | 09 | 1,46,177,971.25 | 69,296,919.45 |
| ஊழியர் கடனும் முற்பணமும் | 08 | 9,705,226.77 | 7,300,114.90 |
| முற்கொடுப்பனவுகள் | | | |
| முதலீடுகள் | 10 | 16,185,657.11 | 7,886,531.61 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 11 | 12,544,413.16 | 6,346,719.64 |
| | | 1,89,279,356.29 | 94,656,006.88 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 3,94,750,119.43 | 2,81,604,314.22 |
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| திரண்ட நிதியமும் ஒதுக்கமும் | 14 | 2,84,182,951.92 | 2,02,463,952.81 |
| | | 2,84,182,951.92 | 2,02,463,952.81 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| நீண்டகாலகடன் | 12 | 15,832,488.57 | 17,788,411.16 |
| நடப்புப் பொறுப்புக்கள் | 13 | 94,734,678.94 | 61,351,950.25 |
| | | 1,10,567,167.51 | 79,140,361.41 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | 3,94,750,119.43 | 2,81,604,314.22 |

**அட்டவணை III**

*2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று*

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

***2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று***

| | 2016.12.31 | 2015.12.31 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்வு** | | |
| சாதாரண நடவடிக்கையிலிருந்தான மிகை/(குறைவு) | 56,603,856.44 | 29,813,831.78 |
| **பணமல்லாத விடயங்களில் மாற்றங்களுக்கான சீராக்கம்** | | |
| தேய்மானம் | - | |
| முந்திய வருடசீராக்கம் | 26,013,866.47 | 1,599,377.53 |
| **தொழில்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு மிகை/குறைவு** | **82,617,722.91** | **31,413,209.31** |
| இருப்பு/கடன்படுநர், பிறவருமதிகள் (அதிகரிப்பு) /குறைவு | (88,454,227.29) | 5,390,612.80 |
| கடன்கொடுநர், பிறசென்மதிகளின் அதிகரிப்பு /(குறைவு) | 33,382,728.69 | (6,386,070.31) |
| **1. செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்வு முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்வு** | **27,546,224.31** | **30,417,751.80** |
| ஆதனகொள்வனவு | (18,522,455.80) | (29,373,084.71) |
| மூலதன செலவினம் | (67,329,726.79) | (34,261,412.07) |
| **2. முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்வு நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்வு** | (85,852,182.59) | (63,634,496.78) |
| மூலதன பெறுவனவு | 66,459,574.39 | 30,559,786.17 |
| கடன்எடுத்தல்-(செலுத்தல்) | (1,955,922.29) | (1,789,314.09) |
| **3. நிதி நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்வு** | 64,503,651.80 | 28,770,472.08 |
| **வருடத்தினுள் தேசிய காசுப்பாய்வு** | 6,197,693.52 | (4,446,272.90) |
| **2016.01.01 இல் காசும் காசுக்கு சமமானவைகளும்** | 6,346,719.64 | 10,792,992.54 |
| **2016.12.21 இல் காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு 01)** | **12,544,413.16** | **6,346,719.64** |
| **குறிப்பு 1 :** | | |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - பொது | 12,052,953.77 | 4,799,439.71 |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு- ஊழியர் கடன் | 491,459.39 | 1,547,279.93 |
| | **12,544,413.16** | **6,346,719.64** |

4-699